# பொதுக்காலம் 14ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

'சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லாரும் என்னிடம் வாருங்கள்' என்று நம்மை அன்பாய் அழைக்கும் இயேசுவின் கரங்களுக்குள் தஞ்சம் அடைய இன்றைய பொதுக்காலம் 14ஆம் ஞாயிறு திருப்பலி நமக்கு அழைப்பு விடுக்கிறது.

இவ்வுலக வாழ்வில் சுமை என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இங்கு பிறப்பெடுக்கும் ஒவ்வொரு உயிரும் தமது சுமையைப் பகிர்ந்து கொள்ள துணையைத் தேடித் தவிக்கிறது. ஆனால் இயேசுவோ உன் சுமை அனைத்தையும் நான் தாங்கிக் கொள்வேன் என்று வாழ்வில் நம்பிக்கையைத் தருகிறார்.

இன்றைய முதல் வாசகத்தில், "நீதியுள்ள வெற்றி வேந்தரின் வருகையால் மகிழ்ந்து களிகூரு" என்று வரவிருக்கும் இறைமகனைப் பற்றி செக்கரியா நூல் எடுத்துரைக்கின்றது. எளிமையுள்ளவராய் கழுதைக் குட்டியில் ஏறி வரும் இறைமகனின் வருகையைப் பற்றியே எடுத்துரைக்கிறார். நாமும் இறைமகன் இயேசுவின் வருகையை எதிர்கொண்டு வரவேற்க தயாராவோம்.

இன்றைய நற்செய்தியில், "நான் கனிவும் மனத் தாழ்மையும் உடையவன்" என்று இயேசு நம்மை நோக்கி அன்பு வார்த்தைகளை உதிர்க்கிறார். பெருமையும் பொறாமையும் போட்டியிட்டு வளர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் கனிவும் மனத் தாழ்ச்சியும் நமக்குள் பிறந்தால் தரணியே புத்துயிர் பெறும். இறை இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பவர்களாக மட்டும் அல்லாமல் அவற்றின் வடிவங்களை உருவாக்கி வளமாக்குவோம். பிறரோடு அன்பையும், பிறரின் சுமைகளையும் பகிர்ந்து, பண்பட்ட வாழ்வை மேற்கொள்ள இப்பலியில் மன்றாடுவோம்.

### இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. 'நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்' என்றவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை மற்றும் திரு அவைப் பணியாளர்கள் உமது கனிவையும் மனத்தாழ்ச்சியையும் அணிந்து, உயிருள்ள நற்செய்தியாக வாழ்ந்து, இச்சமூகத்தில் இயேசுவைப் பிரதிபலிப்பவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. வல்ல செயல்களைச் செய்பவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், அதிகாரப் போக்கினை விடுத்து, அன்புப் பாதையில் வழிநடக்கவும், வேலியே பயிரை மேயும் சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்தி, நாட்டின் இறையாண்மையைப் பேணி, வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த நல்லறிவு தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. என் நுகம் அழுத்தாது என்றவரே எம் இறைவா!

இன்றைய சூழலில் பல்வேறு நோய்களால் கட்டுண்டு தவிக்கும் மக்களின் நுகங்களை மாற்றி, விடுதலை தரவும், மக்கள் நலமான நல்வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. 'சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள்' என்றவரே எம் இறைவா!

எம் பகுதியில் போதிய மழை பொழிந்து, வேளாண்மை சிறக்கவும், நோய் தொற்று குறைந்து இயல்பு வாழ்வு திரும்பவும், குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி பெருகவும், மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையவும், மக்களின் இதய விருப்பங்கள் நிறைவேறவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com